# தேர்தல் பத்திரம் திட்டம் சட்டவிரோதமானது: உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அதிரடி தீர்ப்பு



**புதுடெல்லி**: தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமானது எனக் கூறி அவற்றை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் தேர்தல் பத்திரங்கள் வழங்குவதை வங்கிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது உத்தரவில் தெரிவித்துள்ளனர். தேர்தல் பத்திர முறையில் வெளிப்படைத்தன்மை இல்லை என தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேலும் அந்த உத்தரவில், "தேர்தல் பத்திர முறை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. தேர்தல் பத்திர நன்கொடைக்காக கம்பெனிகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டது சட்டவிரோதம். தற்போதைய விதிகளின்கீழ் தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமாக உள்ளது.

தேர்தல் பத்திர முறை, தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் அரசியல் சாசன பிரிவு 19(1) ஆகியவற்றை மீறும் வகையில் உள்ளது. தேர்தல் பத்திர முறை திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை என்றால் அதனை ரத்து செய்யலாம். கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்சிகளுக்கு நிதி தரும்போது அதற்கு கைமாறு

எதிர்பார்க்க வாய்ப்பு உள்ளது. கறுப்பு பணத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்தை அடைய தேர்தல் பத்திரங்களைத் தவிர வேறு வழிகள் உள்ளன.

அரசிடம் கணக்கு கேட்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது என்பதை பல தருணங்களில் நீதிமன்றங்கள் சொல்லியுள்ளன. நன்கொடை தருவோர் குறித்த விவரங்களை தெரிவிக்கத் தேவையில்லை என்பது வாக்காளர்களின் உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது. எனவே, தேர்தல் நன்கொடை அளிக்க வகை செய்த வருமான வரி திருத்தச் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திர முறை தொடர்பான மற்ற சட்டத் திருத்த மசோதாக்களும் ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திரம் சட்டம் மட்டுமின்றி, கம்பெனி சட்டத் திருத்த மசோதாவும் ரத்து செய்யப்படுகிறது.

தேர்தல் பத்திர நிதி விவரங்களை வழங்காமல் இருப்பதற்கு உரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை. 2019ம் ஆண்டு முதல் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தோர் விவரங்களை எஸ்பிஐ வங்கி வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்பின் விவரங்களை மார்ச் 6க்குள் வழங்க வேண்டும். அதேபோல், நன்கொடை கொடுத்தோர் குறித்த விவரங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் ஏப்ரல் 13ம் தேதிக்குள் வெளியிட வேண்டும்" இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

**வழக்கின் பின்னணி:** கடந்த 2017-18-ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் தேர்தல் பத்திரம் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2018-ம் ஆண்டில் அமலுக்கு வந்தது. இதன்படி பாரத ஸ்டேட் வங்கியின் சார்பில் ரூ.1,000, ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.1 கோடி மதிப்பில் தேர்தல் பத்திரங்கள் வெளியிடப்பட்டன.

ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் ஸ்டேட் வங்கியின் குறிப்பிட்ட வங்கி கிளைகளில் தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும். பொதுவாக ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் வழங்கப்படும்.

எனினும் தேர்தல் காலத்தில் மட்டும் ஒரு மாதத்தில் 30 நாட்கள் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும்.

தனிநபர்கள், நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை வாங்கி தங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக வழங்கலாம். ஒரு நபர், நிறுவனம் எத்தனை பத்திரங்களை வேண்டுமானாலும் வாங்கலாம். இந்த பத்திரங்களில் வாங்குபவரின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள் இருக்காது. 15 நாட்களுக்குள் பத்திரத்தை பணமாக மாற்ற வேண்டும். இல்லையெனில் தேர்தல் பத்திரங்களின் தொகை பிரதமர் நிவாரண நிதியில் டெபாசிட் செய்யப்படும். தேர்தல் பத்திரம் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த திட்டத்தை ரத்து செய்யக் கோரி ஏடிஆர், காமன் கேஸ் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. கடந்த 6 ஆண்டுகளாக விசாரணை நீடித்தது. கடந்த ஆண்டு முதல் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அடங்கிய அமர்வு வழக்கை விசாரித்து வந்தது.

## புல்வாமா தாக்குதல் 5-ம் ஆண்டு நினைவு தினம்: 40 வீரர்களின் உயிர்த்தியாகத்தை நாடு என்றும் நினைவுகூரும் - பிரதமர் மோடி அஞ்சலி

**புதுடெல்லி:** புல்வாமா தாக்குதலில் உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களின் 5-வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2019-ம் ஆண்டு பிப்ரவரி 14-ம் தேதி ஜம்முவில் இருந்து ஸ்ரீநகருக்கு 2,547 துணை ராணுவப் படை வீரர்களை ஏற்றிக்கொண்டு 78 ராணுவ வாகனங்கள் வரிசையாக சென்று கொண்டிருந்தன. அன்று

மதியம் 3.30 மணியளவில் ராணுவ வாகனங்கள் புல்வாமா பகுதியில் சென்று கொண்டிருந்த நிலையில், திடீரென்று ஒரு கார் வேகமாக வந்து, துணை ராணுவப் படையினர் வந்து கொண்டிருந்த ஒரு பேருந்தின் மீது பயங்கரமாக மோதியது.

அந்தக் காரில் வெடிகுண்டு நிரப்பப்பட்டிருந்தது. இதனால், அந்தக் கார் மோதிய பேருந்து வெடித்துச் சிதறியது. இதில் 40 வீரர்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாத அமைப்பான ஜெய்ஷ் இ முகம்மது பொறுப்பேற்றது.

இந்த புல்வாமா தாக்குதலின் 5-வது நினைவு தினமான நேற்று பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “புல்வாமாவில் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு மரியாதை செலுத்துகிறேன். நம் நாட்டுக்காக அவர்கள் செய்த சேவையும் தியாகமும் என்றும் நினைவுகூரப்படும்” என்று பதிவிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, “புல்வாமா தாக்குதலில் தாய்நாட்டுக்காக உயிர்நீத்தவீரர்களுக்கு தலைவணங்குகிறேன். அந்த வீரர்களுக்கு நாடு என்றும் கடன்பட்டிருக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எக்ஸ் பக்கத்தில், “இந்தியாவை பாதுகாப்பதற்காக தங்கள்உயிரைத் தியாகம் செய்த வீரர்களுக்கு என் பணிவான வணக்கத்தை செலுத்துகிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

**சிறந்த டிஜிட்டல் பொருளாதார கட்டமைப்பை கொண்ட நாடு இந்தியா: நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் மைக்கேல் ஸ்பென்ஸ் பாராட்டு**


மைக்கேல் ஸ்பென்ஸ்

**நொய்டா:** இந்தியா மிகச் சிறந்த டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் நிதி கட்டமைப்பை உருவாக்கியுள்ளது என்று நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளாதார அறிஞர் மைக்கேல் ஸ்பென்ஸ் தெரிவித்துள்ளார்.

2001-ம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் மைக்கேல் ஸ்பென்ஸ். நேற்று முன்தினம் நொய்டாவில் உள்ள பென்னட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன், இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு குறித்தும் உலகின் பொருளாதாரப் போக்குக்குறித்தும் அவர் கலந்துரையாடினார். இந்தியாவில் 2016-ம்ஆண்டு யுபிஐ கட்டமைப்பு செயல்பாட்டுக்கு வந்தது. தற்போது பெரிய வணிக வளாகங்கள் முதல் சிறிய பெட்டிக்கடைகள் வரையில் யுபிஐ பரிவர்த்தனை பிரதானமாக மாறியுள்ளது. பணப் பரிவர்த்தனை தொழில்நுட்பத்தில் இந்தியாவின் யுபிஐ கட்டமைப்பானது உலக அளவில் முன்னுதாரணமாக திகழ்கிறது.

இந்நிலையில், இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்து மைக்கேல் ஸ்பென்ஸ் பேசுகையில், “தற்போது இந்தியா உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன், பெரும் வளர்ச்சிக்கான ஆற்றலையும் கொண்டுள்ளது. சிறந்த டிஜிட்டல்பொருளாதாரத்தையும் நிதி கட்டமைப்பையும் இந்தியா உருவாக்கியுள்ளது. இந்தியாவின் போட்டித் தன்மை அதிகரித்துள்ளது” என்று குறிப்பிட்டார்.

EVA STALIN IAS ACADEMY

உலகப் பொருளாதாரப் போக்குகுறித்து பேசிய அவர், “கடந்த 70 ஆண்டுகளாக இருந்துவந்த பொருளாதார கட்டமைப்பு தற்போது மாற்றம் அடைந்து வருகிறது. கரோனா, சர்வதேச அரசியல் பிரச்சினைகள், காலநிலை மாற்றம் ஆகியவை இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணிகளாக உள்ளன.

பெரு நிறுவனங்கள், தங்களுக்கான விநியோகத்துக்கு குறிப்பிட்ட ஒரு நாட்டை மட்டும் சார்ந்திருப்பதிலிருந்து விடுபட்டு, பல இடங்களில் தங்களுக்கான விநியோக தளங்களை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. இது உலகின் பொருளாதாரப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் முக்கியமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு, மருத்துவத் துறையில் நிகழும் புதிய கண்டுபிடிப்புகள், புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டிலிருந்து புதுப்பிக்கத்தக்க எரி ஆற்றல் கட்டமைப்பை நோக்கிய நகர்வு ஆகியவை மனித வாழ்வில் பெரும் தாக்கம் செலுத்தக்கூடியவை ஆகும். புதிய தொழில்நுட்பங்களை நாம் சரியாக பயன்படுத்தினால் மனிதகுலம் மேம்படும். பல்வேறு புதிய வாய்ப்புகள் உருவாகும்” என்று குறிப்பிட்டார்.

EVA S